# மாலைக்கதிர்

Maalaikkathir






சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 01 புதன்கிழமை 17.09.2025 கதிர் 312






## இடிந்து விழுந்தது நல்லூர் இராசதானியை ஆண்ட சங்கிலியன் மன்னனது மந்திரிமனை

யாழ்ப்பாணம், செப். 17

யாழ்ப்பாணத்தில் இன்று பெய்த மழை காரணமாக தொல்பொருள் சின்னமான மந்திரிமனையின் ஒரு பக்கம் இடிந்து விழுந்துள்ளது.

யாழ்ப்பாணம் இராசதானியை ஆண்ட சங்கிலியன் மன்னனது மந்திரிமனை நல்லூரில் சட்டநாதர் சிவன் ஆலயத்துக்கு அருகில் அமைந்துள்ளது.

அந்தக் கட்டடம் உடைந்து விழும் நிலையில் காணப்பட்டது. அதையடுத்து அதற்கு முட்டுக்கொடுத்து கம்பிகள் நடப்பட்டிருந்தன. அந்தக் கம்பிகள் 7 ➤

# காட்டாட்சி முடிந்துவிட்டது! இனி சட்டத்தின் ஆட்சிதான்!!

## வடமராட்சியில் அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு



வடமராட்சி, செப். 17

யாழ். வடமராட்சி, கற்கோவளம் பகுதியில் இடம்பெறும் மணல் அகழ்வு, வாள்வெட்டுத்தாக்குதல் மற்றும் அனைத்து சட்டவிரோத நடவடிக்கைகளுக்கும் முடிவு கட்டப்படும் என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் அந்தப் பகுதி மக்களுக்கு உறுதியளித்துள்ளார்.

அமைச்சர் சந்திரசேகர், உயர்மட்ட பொலிஸ் அதிகாரிகள் சகிதம் கற்கோவளம் பகுதிக்கு இன்று புதன்கிழமை நேரில் சென்று அந்தப் பகுதி மக்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

அதன்போது, சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடும் கும்பலால் மீன்வாடிகள் அடித்து நொறுக்கப்பட்டு தீவைக்கப்பட்ட சம்பவம் தொடர்பிலும், மீனவர்கள் மீதான வாள்வெட்டுத் தாக்குதல் பற்றியும் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மீனவர்கள் மற்றும் மக்களிடம், நடந்தவற்றைக் கேட்டறிந்து பொலிஸாரால் முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் பற்றியும் அமைச்சர் எடுத்துக் கூறினார்.

அத்துடன், சட்டவிரோத போதைப்பொருள் பாவனை மற்றும் வாள்வெட்டுத் தாக்குதல் சம்பவங்கள் என்பவற்றுக்கு நிச்சயம் முடிவு கட்டப்படும் என்று அமைச்சர் உறுதியளித்தார்.

"காட்டாட்சி நிலவிய காலப் பகுதி முடிந்துவிட்டது. இனி சட்டத்தின் ஆட்சி தான் நடக்கும் என்பதை வன்முறைக் கும்பல்கள் புரிந்துகொள்ள வேண்டும். சட்டத்தின் பிடிக்குள் இருந்து தவறிழைத்தவர்கள் தப்பவே முடியாது." - என்று அமைச்சர் மக்களிடம் குறிப்பிட்டார்.

## மஹிந்தவைச் சந்தித்த விமல்



அம்பாந்தோட்டை, செப். 17

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ச, அம்பாந்தோட்டை, தங்காலை - கார்ல்டன் இல்லத்தில் முன்னாள் ஜனாதிபதியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவை நேற்று சந்தித்தார்.

மஹிந்த ராஜபக்ஷவைச் 7 ➤

## இலங்கை மீதான புதிய பிரேரணை:

### சீனா, பாகிஸ்தானின் கோரிக்கையை அடியோடு நிராகரித்துள்ளது பிரிட்டன்



ஜெனிவா, செப். 17

பிரிட்டன் தலைமையிலான தலைமையிலான இணை அனுசரணை நாடுகளால் இலங்கை தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய பிரேரணை குறித்து நடைபெற்ற உத்தியோகப்பற்றற்ற கலந்துரையாடலின்போது இலங்கையில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பான ஆதாரங்களைத் திரட்டும் செயற்றிட்டத்தை இரண்டு வருடங்களுக்குப் பிற்போடுமாறு சீனா மற்றும் பாகிஸ்தான் 7 ➤

## போதைப்பொருளுடன் 524 பெண்கள் சிக்கினர்



கொழும்பு, செப். 17

கடந்த 8 மாதங்களில் போதைப்பொருள் சார் குற்றங்கள் தொடர்பில் 524 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். 7 ➤

## 3 மாத பெண் குழந்தை விபத்தில் சிக்கி மரணம்

கொழும்பு, செப். 17

கொழும்பு - கண்டி பிரதான வீதியில் ரோஹன விகாரைக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் பெண் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

இந்த விபத்து நேற்று செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது என்று பேலியகொடை பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் இருந்து 7 ➤



# வங்கித் துறை தொடர்பான வரவு செலவுத் திட்ட பூர்வாங்கக் கலந்துரையாடல்

கொழும்பு, செப் .17

வங்கி, நிதி மற்றும் காப்புறுதித் துறைகள் தொடர்பான வரவு செலவுத் திட்ட பூர்வாங்கக் கலந்துரையாடல் இன்று (16) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ தலைமையில் இடம்பெற்றது.

இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சி இலக்குகளை அடைவதற்காக ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டத்திற்கு வங்கித் துறையின் ஆதரவை வழங்குதல் பற்றி இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், அது தொடர்பான ஆலோசனைகளும் பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டன.

டிஜிட்டல் மயமாக்கல் வேலைத்திட்டத்தின் மூலம் வங்கி மற்றும் நிதித்துறையின் செயல்திறனை அதிகரிப்பது, சிறிய மற்றும் மத்தியதர தொழில் முயற்சியாளர்களை இலக்காகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள திட்டத்தை விரிவுபடுத்துவது மற்றும் புதிய காப்புறுதி முறைகளை அறிமுகப்படுத்துவது குறித்தும் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இந்த அனைத்து முன்மொழிவுகள் குறித்தும் எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் கவனம் செலுத்தப்படும் என தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

காப்புறுதித் துறையுடன் தொடர்புள்ள தரப்பினர்கள் வரவு செலவுத் திட்ட பூர்வாங்கக் கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டிருப்பது இதுவே முதல் தடவை என்று தெரிவித்த அவர்கள் இந்த அழைப்பிற்கு அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்தனர். (ஐ)

# இலங்கை போக்குவரத்து சபைக்கு பெண் சாரதிகள், நடத்துநர்கள்! விரைவில் ஆட்சேர்ப்பு



கொழும்பு, செப் .17

இலங்கை போக்குவரத்து சபைக்கு பெண் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள் என போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட போதே அவர் இதனைக் தெரிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபையின் 25 டிப்போக்களை நவீனமயமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது இலங்கை போக்கு வரத்து சபை ஊழியர்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக 750 புதிய சாரதிகளையும், நடத்துநர்களையும் ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கை போக்குவரத்து சபை மீண்டும் கட்டமைக்கப்பட்டு இலாபகரமான நிறுவனமாக மாற்றப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# அனைத்து தடைகளும் நீக்கம்!

## ஐ.தே.கவின் செயற்குழு தீர்மானம்

கொழும்பு, செப். 17

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு, சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்த உறுப்பினர்கள் மீது முன்னர் விதிக்கப்பட்ட அனைத்து தடைகள் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளையும் நீக்க முடிவு செய்துள்ளது.

கொழும்பு, புறக்கோட்டையில் உள்ள சிறிகொத்த கட்சி தலைமையகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தின் போது, இந்த நடவடிக்கையால் ஏற்படக் கூடிய சாத்தியமான சட்ட ரீதியான தாக்கங்களை ஆய்வு செய்வதற்காக முன்னாள் சட்டமா அதிபரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான திலக் மாரப்பன தலைமையிலான ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்த உறுப்பினர்கள் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒன்றிணைந்து பணியாற்றுவதைத் தடுத்திருந்த தடைகளை இந்த நடவடிக்கை நீக்கியுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டதிலிருந்து கூட்டு அரசியல் முயற்சிகளை ஆதரித்த அனைத்துக் கட்சிகளுக்கும் நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தையும் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது.



# எதிர்க்கட்சியினரின் வீடுகளுக்குள் அத்துமீறி நுழைந்து போதைப்பொருட்களை வைக்கும் பொலிஸார்

கொழும்பு, செப் .17

எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களின் வீடுகளுக்குள் அத்துமீறிநுழையும்பொலிஸார்அங்கு போதைப்பொருட்களை இரகசியமான முறையில் வைத்து விட்டு பின்னர் கைது செய்கிறார்கள் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் அண்மையில்நடைபெற்றதொகுதி அமைப்பாளர்களுடனான கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் திட்டமிட்ட வகையில் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்படுகிறார்கள். அரசாங்கம் தனது அரசியல் செயற்பாடுகளுக்கு பொலிஸாரையும் பயன்படுத்திக் கொள்கிறது.



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் எல்பிட்டிய பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவரின் வீடு கடந்த வாரம் பொலிஸாரால் அத்துமீறிய வகையில் பரிசோதிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களின் வீடுகளுக்கு அத்துமீறி நுழையும் பொலிஸார் அங்கு போதைப்பொருட்களை இரகசியமாக வைத்து விட்டு பின்னர் கைது செய்கிறார்கள். பொலிஸாரின் செயற்பாடுகள் முறையற்றது.

பொலிஸ்மா அதிபர் இவ்வாறான முறையற்ற செயற்பாடுகளுக்கு இடமளிக்க கூடாது. நாட்டின் சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாக்க வேண்டிய பொலிஸார் அரசியல் நோக்கத்துடன் செயற்பட்டால் அது பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என தெரிவித்துள்ளார். (ஐ)

## போதைப்பொருள்களுடன் மூவர் கைது!

கினிகத்தேனை, செப். 17

ஐஸ் போதைப்பொருள் மற்றும் கஞ்சா போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் மூன்று இளைஞர்கள் கினிகத்தேனை பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டனர். ஓட்டோ ஒன்றில் கஞ்சா கொண்டு செல்லப்படுகின்றது எனக் கினிகத்தேனை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அவர்கள் நடவடிக்கையை மேற்கொண்டு, கினிகத்தேனை - பிளாக்வாட்டர் பகுதியில் ஓட்டோவை நிறுத்தி சோதனை செய்தனர். இதன்போது ஓட்டோ சாரதியிடம் ஒரு கஞ்சா பொட்டலமும், பின் இருக்கையில் பயணித்த சந்தேகநபரிடம் 14 கஞ்சா பொட்டலங்களும், ஒரு ஐஸ் போதைப்பொருள் பொட்டலமும் கண்டுபிடிக்கப்பட்டன.

சந்தேகநபர்களைக் கைது செய்து விசாரித்தபோது, 15 பொட்டலங்களில் பொதி செய்யப்பட்ட 14 ஆயிரத்து 630 மில்லிகிராம் கஞ்சா அவர்களிடம் இருந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர். ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த சந்தேகநபரிடம் இருந்து ஐஸ் வாங்கிய கடத்தல்காரர் பற்றிய தகவல்களைப் பெற்று, வட்டவளை பகுதியில் உள்ள தனது வீட்டில் தங்கியிருந்தபோது அந்த நபரைப் பொலிஸார் கைது செய்தனர். அவரின் வீட்டைச் சோதனையிட்டபோது, விற்பனைக்காகத் தயாரிக்கப்பட்ட 6 ஆயிரத்து 190 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் 70 பொட்டலங்களைப் பொலிஸார் கண்டுபிடித்தனர்.

கைது செய்யப்பட்ட மூன்று சந்தேகநபர்களும் 20 - 25 வயதுக்குட்பட்டவர்கள். கினிகத்தேனை பொலிஸார் மேற்கொண்ட முதற்கட்ட விசாரணைகளில், சந்தேகநபர்கள் ஈஸிகேஷ் முறை மூலம் பணத்தைப் பெற்று, போதைப்பொருட்களை விற்பனை செய்வது தெரியவந்துள்ளது.

போதைப்பொருள் மற்றும் ஓட்டோவுடன் கைது செய்யப்பட்ட மூன்று சந்தேகநபர்களும் ஹட்டன் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் என்று கினிகத்தேனை பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஹட்டன் பிரதேச பொலிஸ் அத்தியட்சகர் பிரதீப் வீரசேகர, உதவி பொலிஸ் அத்தியட்சகர் நிஸ்ஸங்க கொடமுன்ன மற்றும் கினிகத்தேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமை ஆய்வாளர் விராஜ் விதானகே ஆகியோரின் மேற்பார்வையில், கினிகத்தேனை பொலிஸ் அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கடவத்தை–மீரிகம நெடுஞ்சாலைப் பிரிவின் கட்டுமானப் பணிகள் ஆரம்பம்



கொழும்பு, செப் .17

மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் கடவத்தை-மிரிகம பிரிவின் கட்டுமானப் பணிகள் புதன்கிழமை அன்று காலை 10:00 மணிக்கு ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவின் தலைமையில் அதிகாரப்பூர்வமாகத் ஆரம்பிக்கப்பட்டது.

"மறுமலர்ச்சிக்கான நெடுஞ்சாலை" என்ற கருப்பொருளின் கீழ் தொடங்கப்பட்ட இந்தத் திட்டம், போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கும் முக்கியப் பகுதிகளுக்கு இடையிலான பொருளாதார இணைப்பை அதிகரிப்பதற்கும் இலக்காகக் கொண்ட இலங்கையின் அதிவேக நெடுஞ்சாலை வலையமைப்பை விரிவுபடுத்துவதில் ஒரு குறிப்பிடத்தக்க படியைக் குறிக்கிறது. (ஐ)

## வெளியேறிருந்தாலும் பொருட்களை ஒப்படைக்காத முன்னாள் ஜனாதிபதிகள்



கொழும்பு, செப் .17

முன்னாள் ஜனாதிபதிகளின் உத்தியோகபூர்வ இல்லங்கள் பொருளாதார ரீதியில் நன்மையளிக்கும் வகையில் பயன்படுத்தப்படும் என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

1994ஆம் ஆண்டு அமைச்சராக பதவியேற்ற நாள் முதல் தற்போது வரை சுமார் 30 ஆண்டுகளுக்கும் மேலாக இவர்கள் உத்தியோகபூர்வ இல்லங்களிலேயே வாழ்ந்திருக்கின்றனர். இவ்வாறானவர்கள் தான் தம்மால் இல்லங்களிலிருந்து செல்ல முடியாது எனக் கூறிக் கொண்டிருந்தனர்.

ஆனால் இவர்கள் அனைவருக்கும் கொழும்பில் இல்லங்கள் உள்ளன. அவர்கள் பரம்பரை பரம்பரையாக உத்தியோகபூர்வ இல்லங்களில் வாழ்வதற்கு அடிமையாகியுள்ளனர்.

இந்த அரசியல் கலாசாரத்தை மாற்றுவதற்கே மக்கள் எமக்கு ஆணையை வழங்கியிருக்கின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க சட்ட நிறுவனமொன்றின் ஊடாக குறித்த இல்லத்திலிருந்து வெளியேறுவதற்கு கால அவகாசம் கோரியிருக்கின்றார். சிலர் இல்லத்திலிருந்து வெளியேறிருந்தாலும் பொருட்களை ஒப்படைக்கவில்லை.

இவர்கள் முழுமையாக வெளியேறியதன் பின்னர் அந்த இல்லங்களை எவ்வாறு பயன் மிக்கதாக பயன்படுத்துவது என்பது குறித்து அவதானம் செலுத்தப்படும்.

பெரும்பாலான அரச நிறுவனங்கள் பல மில்லியன் வாடகையை கட்டடங்களுக்காக செலுத்திக் கொண்டிருக்கின்றன. அவ்வாறான நிறுவனங்களை இவற்றுக்கு மாற்ற முடியுமா என்பது குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. என தெரிவித்தார். (ஐ)

## இலங்கையில் வேலைவாய்ப்பு பற்றாக்குறை கடுமையாக நிலவும்




*கொழும்பு, செப் .17*

*அடுத்த தசாப்தத்தில் இலங்கையின் பணியாளர்களில் கிட்டத்தட்ட ஒரு மில்லியன் இளைஞர்கள் இணைவார்கள் என்றுஉலக வங்கி எச்சரிக்கிறது, ஆனால் அந்த நேரத்தில் 300,000 (3 லட்சம்) புதிய வேலைகள் மட்டுமே உருவாக்கப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.*

*வேலைவாய்ப்புகளை உருவாக்க தனியார் துறை வளர்ச்சியை ஊக்குவிப்பது அவசியம் என்று உலக வங்கியின் பிரதித் தலைவர் ஜோஹன்னஸ் ஜூட் கூறுகிறார். உலக வங்கியின் பிரதித் தலைவரின் இலங்கைக்கான முதல் அதிகாரப்பூர்வ விஜயத்தின் முடிவில் உலக வங்கி வெளியிட்ட அதிகாரப்பூர்வ அறிக்கையில் இது கூறப்பட்டுள்ளது.*

*உலக வங்கி குழு தனியார் மூலதனத்தை ஈர்ப்பதற்கும், போட்டித்தன்மை மற்றும் சேவை வழங்கலை வலுப்படுத்துவதற்கும், நாடு முழுவதும் வேலை வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கும் அரசாங்கத்துடன் கூட்டாக இணைந்து செயல்படும்.*

*உலகவங்கியின்பிரதித்தலைவர், ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவுடனான தனது கலந்துரையாடலில், இலங்கை கடினமாக வென்ற பொருளாதார ஸ்திரத்தன்மையைப் பாராட்டினார், மேலும் வேலைவாய்ப்புகளை உருவாக்கும், தனியார் முதலீட்டை ஈர்க்கும் மற்றும் முக்கிய துறைகளை நவீனமயமாக்கும் சீர்திருத்தங்களை செயல்படுத்துவதில் அரசாங்கத்திற்கு தொடர்ந்து ஆதரவளிப்பதாக உறுதியளித்தார். உலக வங்கியின் பிரதித் தலைவர் மேலும் கூறியதாவது:*

*"பொருளாதார மீட்சிக்கான அடித்தளம் அமைக்கப்பட்டுள்ளது. வேலைவாய்ப்புகள், முதலீடு மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டிய நேரம் இது. சேவைகளை விரிவுபடுத்துதல் மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், தனியார் மூலதனத்தைத் திரட்டுதல் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஈர்த்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தி, இந்தப் பயணத்தில் இலங்கையை ஆதரிக்க உலக வங்கி குழு தயாராக உள்ளது." என்றார்.(ஐ)*

# உத்தரகாண்ட் மாநிலத்தில் மேகவெடிப்பு: கடும் வெள்ளத்தில் சிக்கி உயிரிழப்பு 18ஆக உயர்வு!



உத்தரகாண்ட் மாநிலம் டேராடூனில் ஏற்பட்ட மேகவெடிப்பு மற்றும் வெள்ளப் பெருக்கால் 18 பேர் உயிரிழந்துள்ளனர். உத்தராகண்ட் மாநிலத்தில் மேகவெடிப்பால் கொட்டித் தீர்த்த மழையால் ஏராளமான வீடுகள் சேதமடைந்தன. திங்கட்கிழமை காலை முதலே கனமழை பெய்து வந்த நிலையில், இரவில் டேராடூனில் மேகவெடிப்பால் வானத்தில் இருந்து அருவி போல் மழை கொட்டியது. இதன் காரணமாக தம்சா ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. ஆற்றங்கரையோரத்தில் உள்ள தப்கேஷ்வர் மகாதேவ் கோயிலைச் சுற்றி வெள்ளம் சூழ்ந்தது. இதே போன்று, நிலச்சரிவால் வீடுகள் மற்றும் சாலைகளும் பலத்த சேதமடைந்தன.

டேராடூனில் நேற்று அதிகாலை ஒரு பாலம் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டது. இதில் 5 பேர் பலியாகினர். பாதிக்கப்பட்ட பகுதிகளில் பேரிடர் மீட்பு படை நிவாரணம் மற்றும் மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. இந்நிலையில், டேராடூன் மற்றும் சுற்றுப்பகுதிகளில் வெள்ளம், நிலச்சரிவு ஏற்பட்டு பலியானோர் எண்ணிக்கை 18ஆக உயர்ந்துள்ளது. மேலும் 13 பேர் காணாமல் போயுள்ளனர். அவர்களை தேடும் பணி நடந்து வருகிறது.

டேராடூன் மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை முதலமைச்சர் புஷ்கர் சிங் தாமி பார்வையிட்டு நிலவரத்தை ஆய்வு செய்தார். உத்தராகண்டில் கனமழையை தொடர்ந்து ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து முதலமைச்சர் புஷ்கர் சிங் தாமியிடம் பிரதமர் மோடி, ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா கேட்டறிந்து, மாநிலத்துக்கு சாத்தியமான அனைத்து உதவிகளையும் அளிப்பதாக அவர்கள் உறுதி அளித்தனர். (ஐ)

## மழையால் இடிந்த வீட்டை புதுப்பிக்கக்கோரி மனு: முதியவரிடம் மனுவை திருப்பிக் கொடுத்த சுரேஷ் கோபி



கேரளாவில் ஒன்றிய அமைச்சர் சுரேஷ் கோபி மழையால் இடிந்த வீட்டை புதுப்பிக்க மனு கொடுத்த முதியவர் ஒருவரிடம் என்னுடைய வேலையல்ல என்று திருப்பி கொடுத்த சம்பவத்தால் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. திருச்சூரை சேர்ந்த கொச்சு வேலாயுதம் என்ற 80வயது முதியவர். 2 ஆண்டுகளுக்கு முன்பு மழை காலத்தில் தென்னை மட்டை விழுந்து கூரை சரிந்த தமது வீட்டை சரிசெய்யமுடியால் தவித்து வந்தார். உடல் நலன் பாதிக்கப்பட்டு அறுவை சிகிச்சை செய்துள்ள அவர் தனது பகுதியில் நடந்த நிகழ்ச்சியில் பங்கேற்க வந்த திருச்சூர் பகுதி எம்.பியும் நடிகருமான சுரேஷ் கோபியிடம் உதவி கோரி மனு கொடுத்தார். ஆனால் மனுவை வாங்கும் போதே இதெல்லாம் எம்.பியின் வேலை இல்லை பஞ்சாயத்தில் சொல்லுங்கள் என்று சுரேஷ் கோபி கூறியதால் கூட்டத்தில் இருந்தவர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

சுரேஷ் கோபியின் அலட்சியமான பதில் கேரளா முழுவதும் வைரலாக நிலையில் அவரது நடவடிக்கைக்கு கடும் கண்டனம் எழுந்துள்ளது. சம்பவம் குறித்து கருத்து தெரிவித்த முதியவர் கொச்சுவேலாயுதன் அந்த மனுவை படித்துக்கூட பார்க்காமல் கொடுத்தது தான் மிகுந்த மனவேதனையை ஏற்படுத்தியதாக கோரினார். இந்நிலையில் இப்பிரச்சனையை கையில் எடுத்துள்ள மார்க்சிஸ்ட் கட்சியின் திருச்சூர் மாவட்ட செயலாளர் அப்துல் காதர் மனுவை வாங்கும் போதே நிராகரிக்கப்பட்ட கொச்சு வேலாயுதத்தின் வீட்டை கட்டித்தரும் பணியை சிபிஎம் மேற்கொள்ளும் என அறிவித்துள்ளார்.

இதை அடுத்து இந்த விவகாரம் குறித்து முகநூல் பக்கத்தில் விளக்கம் அளித்துள்ள சுரேஷ் கோபி.பொது விஷயம் ஒன்றில் என்ன செய்ய முடியும் என்ற தெளிவான பார்வை தம்மிடம் இருப்பதாகவும் நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றுவது தமது வேலை அல்ல என்றும் தெரிவித்துள்ளார். வீட்டுவசதி என்பது மாநில அரசின் விவகாரம் அதை தான் எப்படி செய்ய முடியும் என்று வினவி உள்ள சுரேஷ் கோபி. ஒரு குடும்பத்துக்காக வீட்டை கட்டித்தர வேறொரு கட்சி முன்வந்திருப்பதை வரவேற்பதாகவும் தம்மால் அவர்களுக்கு வீடு கிடைத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (ஐ)

## நாட்டிலேயே குளிர்சாதன பெட்டி பயன்பாட்டில் சென்னை முதலிடம்

நாட்டிலேயே குளிர்சாதன பெட்டி பயன்பாட்டில் சென்னை முதலிடத்தை பிடித்துள்ளது. சென்னை உள்ளிட்ட பல இந்திய நகரங்களில், குளிர்சாதனப் பெட்டிகளின் (யுஊ) பயன்பாடு அதிகரித்துவருவதாகவும், இதனால் குளிர்பதன உமிழ்வுகள் குறித்து கவலைகள் எழுவதாகவும் ஒரு ஆய்வு வெளிவந்துள்ளது. இந்த ஆய்வில், வீட்டு உபயோகங்களின் அடிப்படையில் ஏசி பயன்பாட்டில் சென்னை முதலிடத்தில் இருப்பதை காட்டுகிறது. நாட்டின் 7 முக்கிய நகரங்களில் ஏசி பயன்பாட்டில் சென்னை முதலிடத்தில் இருப்பதாக ஆய்வில் தகவல் வெளியாகி உள்ளது.

ஏசி பயன்பாட்டில் மாற்றம் கொண்டுவரும் வகையில், ஒன்றிய அரசு ஏசி வெப்பநிலையை 20 டிகிரி செல்சியஸ் வரை குறைக்கும் திட்டத்தை அறிவித்துள்ளது. வீடுகள், வணிக வளாகங்கள் உள்ளிட்டவற்றில் தற்போது 16 டிகிரி செல்சியஸ் முதல் 30 டிகிரி செல்சியஸ் வரை வெப்பநிலை மாற்றும் வசதி உள்ள ஏசி-க்களில், குறைந்தபட்ச வெப்பநிலையை 20 டிகிரி செல்சியஸ் அளவுக்கு மாற்ற உள்ளதாக ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது . சென்னையில் உள்ள குடும்பங்கள் ஒரு நாளைக்கு சராசரியாக 4.4 மணிநேரம் குளிர்சாதன வசதி பயன்படுத்து கின்றனர். 23மூ பேர் 2க்கும் மேற்பட்ட குளிர்சாதன பெட்டிகளை வைத்துள்ளனர். இது தேசிய சராசரியை விட 2 மடங்கு அதிகமாகும். (ஐ)



## பீகாரில் 12ம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்கள் மாணவர்கள் உயர் கல்வி தொடர வட்டியில்லா கடன்: முதல்வர் நிதிஷ் குமார் அறிவிப்பு

பீகாரில் 12ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்கள் உயர் கல்வி தொடர வட்டியில்லா கல்வி கடன் வழங்கப்படும் என முதல்வர் நிதிஷ் குமார் அறிவித்துள்ளார். பீகாரில் நிதிஷ் குமார் தலைமையிலான ஐக்கிய ஜனதா தளம் பாஜ கூட்டணி ஆட்சி செய்து வருகிறது. இங்கு நடப்பாண்டு அக்டோபர் அல்லது நவம்பர் மாதத்தில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெற உள்ளது. அங்கு மீண்டும் ஆட்சியை பிடிக்க முதல்வர் நிதிஷ் குமார் பல்வேறு அறிவிப்புகளை தற்போதே வெளியிட்டு வருகிறார்.

அதன்படி ஏற்கனவே, பீகாரில் அனைத்து போட்டி தேர்வுகளுக்கும் ஒரே மாதிரியான தேர்வு கட்டணம் வசூலிக்கப்படும், பீகாரில் ஆசிரியர் பணிக்கு ஆள்சேர்ப்பதில் மாநிலத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார். மேலும், ஆண் விண்ணப்பதாரர்களுக்கு 4 சதவீத வட்டி விகிதத்திலும், பெண்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் திருநங்கை விண்ணப்பதாரர்களுக்கு 1 சதவீத வட்டி விகிதத்திலும் ரூ.4 லட்சம் வரை கல்விக்கடன்கள் வழங்கப்பட்டன.

இந்நிலையில் கல்விக்கடன்களுக்கான வட்டி விகிதத்தை ரத்து செய்ய முதல்வர் நிதிஷ் குமார் அரசு முடிவு செய்துள்ளது. இதுகுறித்து முதல்வர் நிதிஷ் குமார் தன் எக்ஸ் பதிவில், "12ம் வகுப்பு தேர்ச்சி பெறும் மாணவர்கள் அனைவரும் உயர் கல்வியை தொடரும் விதமாக பீகார் அரசு சிறப்பு திட்டத்தை அறிவித்துள்ளது. மாணவர்களின் நலன் கருதி கல்விக்கடன் பெறும் அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் வட்டியில்லா கல்விக்கடன் வழங்கப்படும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், "கடந்த 2016 அக்டோபர் 2ம் தேதி முதல் பீகாரில் உள்ள மாணவர்களுக்கு கல்விக்கடன் வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது. முன்பு ரூ.2 லட்சம் வரையிலான கல்விக்கடன் 60 மாத தவணைகளில் திருப்பி செலுத்தப்பட வேண்டும். இது தற்போது அதிகபட்சமாக 84 மாதங்களாக நீட்டிக்கப்படுகிறது. இதேபோல், ரூ.2 லட்சத்துக்கு மேல் கல்விக்கடன் பெறுவோர் 84 மாத தவணைகளில் திருப்பி செலுத்த வேண்டும்.

இது தற்போது அதிகபட்சமாக 120 மாத தவணைகளாக நீட்டிக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் உயர் கல்வியை தொடர முடியும் என்பதை உறுதி செய்வதே எனது அரசின் நோக்கம். இந்த முடிவுகள் மாணவர்களின் மன உறுதியை அதிகரிக்கும். அவர்கள் அதிக உற்சாகத்துடனும், அர்ப்பணிப்புடனும் உயர் கல்வியை தொடர உதவும். இது மாணவர்களின் எதிர்காலத்தை மட்டுமல்ல, மாநிலத்தின், நாட்டின் எதிர்காலத்தையும் சிறப்பாக மாற்றும்" என்று தெரிவித்துள்ளார். (ஐ)

# மரம் ஒரு வரம்



பூமியில் மூன்றில் ஒரு பங்கு காடுகள் இருக்க வேண்டும் என்பது இயற்கையின் விதி. இவ்வாறு இருந்தால் நமக்கு கிடைக்கும் பயன் அதிகம். காடுகள் மழையைத் தருவதுடன நிலச்சரிவைக் கட்டுப்படுத்துகிறது. மண் அரிப்பை கட்டுப்படுத்துகிறது. கரியமில வாயுவை நிர்ணயம் செய்யும் தன்மை மரங்களுக்கு உள்ளது. புவியின் தட்பவெட்பத் தன்மையை நிர்ணயிக்கும் காரணிகளாக காடுகள் உள்ளன.

காடுகள் அழிக்கப்படுவதால் கடல் மட்டம் உயர்வு, புவி வெப்பம் ஏற்பட்டு சில பகுதிகளில் அதிக மழை, சில பகுதிகளில் வறட்சி உருவாகிறது. கடலோரப் பகுதிகளில் மரங்கள் வளர்க்கப்படும்போது அலைகளை கட்டுப்படுத்தும் சக்தி மரங்களுக்கு உண்டாகிறது. புவியைக் காத்தால் தான் உயிரினங்களைக் காக்க முடியும்.

இந்தியாவில் 33 சதவிகித அளவுக்கு இருந்த காடுகள் குறைந்து தற்போது 22 சதவிகித காடுகள் மட்டுமே உள்ளன. இந்த 11 சதவிகிதத்தை அடைய வேண்டும் என்றால் 54 கோடி மரங்களை நடவேண்டும். வனத்துறை மட்டுமே இந்தப் பணியை செய்ய முடியாது. எனவே நாமும் ஆளுக்கொரு மரம் நடவேண்டும்.

காடு வளர்ப்பு என்பதை ஒரு மக்கள் இயக்கமாகச் செயல்படுத்த வேண்டும். இந்தியாவில் எந்தெந்தப் பகுதிகளில் என்னென்ன மரங்கள் வளரும் என்பதையும், மண்ணின் வகை, அமிலத் தன்மை, வளம் ஆகியவை, எந்த மரங்களை நட்டால் வேகமாக வளரும் என்பது குறித்த ஆய்வையும் நாம் மேற்கொள்ள வேண்டும்.

பருவநிலை மாற்றத்தை தடுக்க 700 கோடி மரங்கள்: ஐ.நா. திட்டம் :

புவி வெப்பமடைவதால் ஏற்பட்டு வரும் பருவநிலை மாற்றத்தை தடுக்கும் நடவடிக்கையின் முதற்கட்டமாக உலகம் முழுவதும் 300 கோடி மரங்களை ஐ.நா நடவு செய்துள்ளது. இந்நடவடிக்கையில் மொத்தம் 700 கோடி மரங்களை நடவு செய்ய முடிவு செய்துள்ளதாக ஐ.நா. செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

கரியமில வாயுவை உறிஞ்சும் தன்மை மரங்களுக்கும் காடுகளுக்கும் மட்டுமே உண்டு. மாறாக காடுகள் அழிக்கப்படுவதனால் மனிதனால் உருவாக்கப்படும் கரியமில வாயு மொத்த கரியமில வாயு உற்பத்தியில் 20% பங்களிப்பு செய்வதாக புள்ளிவிவரம் கூறுகிறது.

ஐக்கிய நாடுகள் (ஐ.நா) சுற்றுச்சூழல் திட்டம், உலக வேளாண் காடுகள் மையம் ஆகிய இரண்டு அமைப்புகள் சார்பில் கடந்த 2006இல் மரங்கள் நடவு செய்யும் நடவடிக்கை துவக்கப்பட்டது.

இந்த மரங்கள் நடும் திட்டத்தில் தற்போது எத்தியோப்பியா 72.5 கோடி மரங்களை நடவு செய்து முதலிடத்திலும், துருக்கி 70 கோடி மரங்களை நடவு செய்து 2வது இடத்திலும் முன்னிலை வகிக்கின்றன.

இப்பட்டியலில் மெக்சிகோ (47,24,04,266 மரங்கள்) 3வது இடத்திலும், கென்யா (13,98,93,668 மரங்கள்) 4வது இடத்திலும், 13,74,76,771 மரங்களை நட்டு கியூபா 5வது இடத்திலும் உள்ளன.

உலக நாடுகளின் சுற்றுச்சூழல் மையங்கள் மரம் நடும் நடவடிக்கைகளில் தங்களது கவனத்தை திருப்ப வேண்டும் என்று ஐ.நா. சுற்றுச்சூழல் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

2011 சர்வ தேச வன ஆண்டாக கொண்டாடப்படுகிறது. ஐரோப்பா கண்டத்தைத் தவிர மற்ற கண்டங்கள் அனைத்தும் தனது வன செல்வத்தை இழந்து வருகிறது. குறிப்பாக தென் அமெரிக்கா ஆப்பிரிக்கா கண்டங்களில் இதன் தாக்கம் அதிகம்.

இந்தியாவைப் பொறுத்தவரையில் கனிம வளங்களை பன்னாட்டு நிறுவனங்களுக்கு தாரை வார்ப்பதில் பெருமளவு வன பகுதிகள் சர்ச்சைக்குரிய பகுதிளாக மாறி வனபாதுகாவலர்களான வனவாசிகளுக்கும், அரசுகளுக்கும் நடக்கும் நிகழ்வுகளை நாம் அனுதினமும் படிக்கிறோம். எல்லா உயிர்களுக்கும் வாழ்வாதாரமான வனத்தை பற்றி அக்கரை கொள்ளுகிறோமா? என்றால் சற்று கவலையளிப்பதாகத்தான் உள்ளது.

தமிழகத்தின் குறைந்த, அதிக வனமுள்ள மாவட்டங்கள்

தமிழகத்தைப் பொறுத்த வரையில் டெல்டா மாவட்டங்களில் வன அளவு மிகக் குறைவாக இருப்பதுடன் சுனாமி, வெள்ளம் போன்ற இயற்கை சீற்றத்தின்போது பெருமளவு நஷ்டத்தை மாநிலம் அடைய வேண்டியுள்ளது.

இந்த ஆண்டில் நமது குழந்தைகளின் வாழ்க்கையில் உண்மையான அக்கரை கொண்டிருப் பவர்களாக இருந்தால் அவர்களின் நல் வாழ்விற்காக பொன்னையும் பொருளையும் சேர்ப்பதை சற்று குறைத்து வாழ்வாதாரமான சுத்தமான காற்று, மழை இவற்றுக்கு வனங்கள் தேவை என்பதை உணர்ந்து அதனை பாதுகாக்க நம்மாலான உதவிகளை செய்தாலே போதும் வனங்கள் விரிவடைந்துவிடும். நாம் ஒவ்வொருவரும் இதில் சிறப்பாக பங்களிக்க வேண்டும்.

மரம் வளர்ப்பு குறித்த சிந்தனைகள் பல. ஒவ்வொரு வருக்கும் அவரவர்

செயலுக்கு ஏற்ப சிந்தனைகள் மாறுபடும் வலுப்படும். ஆனால் அனைவரின் ஒருமித்த சிந்தனையின் நோக்கம் மரம் வளர்ப்பு. மரம் வளர்ப்பின் அவசியத்தினை அரசு அமைப்புகளும், அரசு சார அமைப்புகளும் சொல்லிக்கொண்டுதான் இருக்கின்றன. ஆனால்.. இந்த வார்த்தைகள் மதிக்கப் பட்டு செயல் வடிவம் பெறுகிறதா? இல்லை. ஏன்? ஆம் அரசு அமைப்புகள் மற்றும் அரசு சார அமைப்புகள் பெரும்பாலும் ஏட்டளவில் தங்கள் பெயர் இடம் பெறவே இது போன்ற செயல்களை முன்னெடுத்துச் செல்கின்றன, ஏன் இந்த நிலை. ?

அமைச்சர் நட்டிய மரக்கன்று 1000 வருடங்கள் ஆனாலும் ஆழியாது மரக்கன்று அல்ல. அமைச்சர் நட்டிய மரக்கன்று எனும் செய்தி மட்டும். அரசின் செய்தி ஏட்டில் இருந்து மறையாது. இப்படிதான் இன்று அரசின் செயல் திட்டங்கள. நாம் இங்கே அரசினை சாடுவது நம் நோக்கம் அல்ல. நாம் அரசிடம் எப்படி எல்லாம் ஏமாறுகிறோம். மர வளப்பிற்கு அரசு கவனம் செலுத்தினால் பசுமை தமிழகம் காணமுடியாதா?

வேண்டாம். நாம் இனி எந்த அரசிடமும் ஏமற வேண்டாம். நாம்தான் அரசு என்பதனை உணர்த்துவோம் அரசாளும் நபர்களுக்கு. நாமும் மானிடன் தான் என்பதை அவர்கள் உணரும் காலம் வரும்.. விவசாயம் ஒரு தொழில். எங்கள் தொழிலுக்கு என் ஒரு குறைந்த பட்ச இலாப விகிதத்தினை நாங்கள் நிர்ணியித்துக்கொள்கிறோம். எனும் நிலை கொண்டு வருவோம். இருப்பவர்கள் இல்லை என்று சொல்லாமல் இருக்கும் வரை இல்லாதவர்கள் இங்கு யாரும் இல்லை. எனும் நிலை கோண்டு வருவோம். வாருங்கள் நம் செயலினை முழு வடிவம் கொண்டு வருவோம்.



நீங்கள் மரம் வளர்க்க விரும்புகிறீர்களா.. சில நல் உணர்வு ஒப்பந்த அடிப்படையில் நாம் பிற இயற்கை ஆர்வலர்களிடம் இருந்து உங்களுக்கு தேவையான அளவு நல் மரக்கன்றுகளை இலவசமாக அளிக்க தயாராக இருக்கிறோம். உங்கள் மரம் வளர்ப்பு சிந்தனைகளை சொல்லுங்கள். எப்படி நாம் இந்த சுயநல விரும்பிகளிடம் இருந்து நாம் வளர்க்கும் மரங்களை பாதுகாக்க முடியும், உங்கள் சிந்தனைகள் ஆலோசனைகள் மற்றவர்களுக்கும் உதவட்டும். வாருங்கள் இங்கே நம் எண்ணக்கரங்களுக்கு வலு சேர்ப்போம். இது நாம் வாழும் இந்த உலக நலனுக்காக எனும் சிந்தையில் ஒன்றிணைந்து மரம் வளர்ப்போம் வாருங்கள்.

ஒரு நிமிடம் கண்ணை மூடி நம் ஊரின் மழை கால இயற்கை நினைத்து பாருங்கள்

ஊரின் ஆறு ஓடை நீர் நிரம்பி அழகான அந்த காலம் இன்று இல்லை என்ன காரணம் ?

சரியான நேர மழை இல்லாதது ஒரு காரணம் இதற்க்கு முக்கிய காரணம் மரம் இல்லாமல் நம் ஊர் போட்டால் காடாக மாறி வருவது ஒரு காரணம்!

நாம் படித்து இன்று அமெரிக்கா லண்டன் துபாய் சிங்கப்பூர் என்று நம் வாழ்க்கை நிலை மாறி விட்டது, ஏன் நம் நம் ஊரை பற்றி நினைக்க வேண்டும் என்று பலரும் நினைப்பதால் தான் நம் ஊருக்கு நம்மால் முடிந்த உதவி செய்ய முடியாமல் இருக்கிறோம்.

அதிகம் வேண்டம் நம் ஊரில் நம் படித்த பள்ளிகள் உள்ளன அதை சுற்றி மற்றும் பள்ளிகூட உள்பகுதிகளில் மரம் நட்டு நம்மால் முடிந்த செய்யலாம். அரசியல்வாதி போல் ஒரு நாள் மரம் நட்டு மறு நாள் ஆட்டுக்கு இரையாகமல் அந்த மரம் ஒரு நல்ல பருவம் வரும் வரை அதை பாதுகாக்க , ஒரு வேலை நீர் ஊற்றினால் நிச்சயமாக ஒரு வருடத்தில் மரம் பெரியதாக வளரும்.

நிச்சயமக இது ஒரு ஆள் செய்ய இயலாது. நம் பள்ளி நண்பர்கள் ஊர் நண்பர்கள் சேர்ந்து செய்ய இயலும்.

நல்ல வசதி உள்ள உள்ளூர் நண்பர்கள் சேர்ந்து ஆண்டின் ஏதும் ஒரு நாள் பிளான் செய்தால் நிச்சயமாக செய்யலாம் . இது மட்டும் நிச்சயமாக வெற்றி அடைந்தால் மீண்டும் கண்ணை மூடி நாம் நம் ஊரின் அழகை மீண்டும் நேரில் பார்க்கலாம்.

நாம் அன்னதானம் செய்வது போல் ஏன் இதை செய்ய இயலாது.

நம் ஊரை, நம் இயற்க்கை நாம் காப்பற்ற நம்மால் முடிந்த ஒரு சின்ன முயற்சியாக இது அமையும்.

உங்கள் ஊரின் படித்த நண்பர்கள் நீங்கள் இன்டர்நெட் மூலம் தொலை பேசி ,சிறு குழுக்கள் மூலம் வசூல் செய்து ஒரு நாள் குறிப்பிட்டு அந்த நாளில் மரம் நடலாம் . மிக முக்கியமான ஒரு விஷயம் மரம் நடுவது மட்டும் குறிக்கோள் அல்ல,


அந்த செடி மரம் ஆகும் வரை நாம் காப்பற்ற வேண்டும். மனம் இருந்தால் நிச்சயம் செய்யலாம்.

மரம் செழித்து, மழை கொழித்து, பூமி மகிழ கை கோர்ப்போம் வாருங்கள்!

மரம் செடிகளை அதிக அளவில் வளர்க்க வேண்டும், ஒரு இயற்கையான சூழ்நிலையை நமது இடத்தில் வைத்து இருக்க வேண்டும் என்பதில் அதிக ஆர்வம், அதனால் நம்மால் முடிந்த அளவு

(7ஆம் பக்கம் பார்க்க...)

# மரணத்தை வெல்ல ரஷ்யா, சீனா ஆராய்ச்சி.. மனிதர்களின் ஆயுட்காலத்தை நீட்டிக்க விரிவான மருத்துவ ஆய்வுகள்



மனிதனின் ஆயுட்காலத்தை நீட்டித்து கொண்டு செல்வது குறித்து ஆய்வுகள் ரஷ்யாவில் வேகம் பெற்று இருக்கின்றன. எத்தனை வயதானாலும் இளமையை அப்படியே தக்க வைத்து கொள்ளவும், இயன்றவரை மரணத்தை தள்ளிப்போடவும் ரஷ்யாவில் தீவிர ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. கடந்த 9 ஆண்டுகளில் 50 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதாக ழேஎயலய புயணநவய நுரசழிந என்ற பத்திரிக்கை தெரிவித்து இருக்கிறது. இந்த ஆண்டு மட்டும் ஆய்வுகளுக்கு முன் எப்போதும் இல்லாத வகையில் இந்திய ரூபாய் மதிப்பில் 4,300 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக அப்பத்திரிகை தெரிவித்து இருக்கிறது.

இதில் ஒரு ஆய்வு ரஷ்ய அதிபர் மகள் மரியா வொரன்ட்சோவா தலைமையில் மேற்கொள்ளப்படுவதாகவும், ரஷ்யாவில் அரசு துறைகள் தவிர, தனியார் நிறுவனங்களும் வயது மூப்பை தடுத்து மனிதனின் வாழ்நாளை நீட்டிப்பது குறித்து ஆய்வு செய்து வருவதாகவும் தகவல்கள் உண்டு. 72 வயதான ரஷ்ய அதிபர் புதின், தற்போது துடிப்பான நபராக உள்ளார். வயது மூப்பை தடுப்பது, இறவாநிலை குறித்த ஆய்வுகளில் புதினுக்கு ஆர்வம் அதிகம் என கூறப்படுகிறது.

அண்மையில் சீனா சென்றபோது கூட அந்நாட்டு அதிபர் சீ சின்பிங்குடன் வயது மூப்பு தடுப்பு, இறவாநிலை குறித்து புதின் பேசியிருந்தார். உயிர் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டு வரும் முன்னேற்றங்கள் இளமையை மனிதன் பெறமுடியும் என்றும், மரணத்தையே வெல்லும் சூழல் கூட உருவாகும் என புதின் பேசியிருந்தார். ரஷ்யாவை போல சீனாவும் கூட வயதாவதை தடுத்து வாழ்நாள் நீட்டிப்பது தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ)

## ரூ.1.3 லட்சம் கோடி கேட்டு நியூயார்க் டைம்ஸ் பத்திரிகை மீது டிரம்ப் அவதூறு வழக்கு



தனக்கு எதிராக பல ஆண்டாக தவறான செய்திகள் வெளியிடுவதற்கு எதிராக நியூயார்க் டைம்ஸ் பத்திரிகை மீது ரூ.1.3 லட்சம் கோடி கேட்டு அதிபர் டிரம்ப் அவதூறு வழக்கு தொடர்ந்துள்ளார். அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள மாவட்ட நீதிமன்றத்தில் அதிபர் டிரம்ப் தரப்பில் நியூயார்க் டைம்ஸ் பத்திரிகை மற்றும் அதன் 2 பத்திரிகையாளர்கள் மீது அவதூறு வழக்கு தொடரப்பட்டுள்ளது.

அதில், கடந்த பல ஆண்டாக தனக்கும் தனது குடும்பம், தொழில், அரசியலுக்கு எதிராகவும் நியூயார்க் டைம்ஸ் பத்திரிகை உண்மைக்கு புறம்பான அவதூறு செய்திகளை வெளியிடுவதாக டிரம்ப் குற்றம்சாட்டி உள்ளார். இந்த வழக்கு குறித்து டிரம்ப் தனது சமூக ஊடக பதிவில், “நியூயார்க் டைம்ஸ் பத்திரிகை என்னைப் பற்றி பொய் சொல்லி அவதூறு பரப்புகிறது.

அப்பத்திரிகை ஜனநாயக கட்சியின் ஊதுகுழலாக மாறிவிட்டது” என கூறி உள்ளார். முன்னதாக, பாலியல் குற்றவாளி எப்ஸ்டீனுக்கு பிறந்தநாள் கடிதம் அனுப்பியதாக செய்தி வெளியிட்ட தி வால் ஸ்ட்ரீட் ஜர்னல் பத்திரிகைக்கு எதிராக டிரம்ப் ரூ.88 ஆயிரம் கோடி மானநஷ்ட வழக்கு தொடர்ந்தது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இஸ்ரேல் தாக்குதலில் கொல்லப்பட்ட 31 நிருபர்களின் இறுதிச்சடங்கு



இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதல்களில் கொல்லப்பட்டதாக கூறப்படும் 31 நிருபர்களின் இறுதிச்சடங்குகளில் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். இஸ்ரேலின் பல அடுக்கு வான் பாதுகாப்புகளை மீறி கடந்த வாரம் தெற்கு விமான நிலையத்தின் மீது ஹவுதிகள் டிரோன் மூலமாக தாக்குதல் நடத்தினார். இதில்விமான நிலைய கண்ணாடி ஜன்னல்கள் உடைந்து சேதமடைந்தது. இதில் ஒருவர் காயமடைந்தார்.

இதனை தொடர்ந்து ஏமன் நாட்டின் தலைநகரான சனாவின் மீது இஸ்ரேல் வான்வழி தாக்குதல் நடத்தியது. ஈரான் ஆதரவு பெற்ற ஹவுதி கிளர்ச்சியாளர்களை இலக்காக கொண்டு இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் உள்ளூரை சேர்ந்த 31 பத்திரிக்கையாளர்கள் கொல்லப்பட்டனர். கடந்த வாரம் தாக்குதல்களில் உயிரிழந்ததாக கூறப்படும் 31 பத்திரிக்கையாளர்களின் இறுதிச்சடங்கு நேற்று நடத்தப்பட்டது. இதில் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர். (ஐ)

## பணயக்கைதிகளை ஹமாஸ் விடுவிக்காவிட்டால் காசா முழுமையாக அழிக்கப்படும்: இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர்



காசா நகரில் தீவிர தரைவழி தாக்குதலை இஸ்ரேல் ராணுவம் தொடங்கிய நிலையில், ஆயுதங்களை கீழே போட்டு, பணயக்கைதிகளை ஹமாஸ் விடுவிக்காவிட்டால் காசா முழுமையாக அழிக்கப்படும் என இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் கட்ஸ் எச்சரித்துள்ளார். கத்தார் தலைநகர் தோகாவில் ஹமாஸ் தலைவர்களை குறி வைத்து இஸ்ரேல் ராணுவம் சமீபத்தில் திடீர் தாக்குதல் நடத்தியது. இந்த விவகாரத்தில் இஸ்ரேலுக்கு அரபு-முஸ்லிம் நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. இஸ்ரேலுக்கு எதிராக அரபு-முஸ்லிம் நாடுகள் ஒன்றிணைந்துள்ளன.

இந்த சூழலில், காசாவின் முக்கிய நகரமான காசா நகரில் இஸ்ரேல் ராணுவம் நேற்று முன்தினம் தரைவழி தாக்குதலை தொடங்கி உள்ளது. கடந்த சில நாட்களாக காசா நகரில் உயரமான குடியிருப்பு கட்டிடங்களை தாக்கி அழித்த நிலையில், காசா நகரம் பாதுகாப்பற்ற பகுதியாக இஸ்ரேல் ராணுவம் நேற்று அறிவித்தது. இதனால் உடனடியாக அங்குள்ள மக்கள் தெற்கு பகுதியில் இஸ்ரேல் கட்டுப்பாட்டில் உள்ள முகாம்களுக்கு செல்ல உத்தரவிட்டுள்ளது.

இந்த உத்தரவைத் தொடர்ந்து லட்சக்கணக்கான மக்கள் தங்கள் குழந்தைகள் உடைமைகளுடன் வாகனங்களிலும், நடந்தபடியும் நீண்ட வரிசையாக முகாம்களை நோக்கி செல்கின்றனர். ஏற்கனவே அந்த முகாம்களில் தங்க இடவசதி இல்லாததால் சிலர் காசா நகரத்திலேயே தொடர்ந்து தங்கி உள்ளனர். இந்த நிலையில், போர் விமானங்கள், டிரோன்கள், ஏவுகணைகள் மூலமாகவும் தரைவழியாகவும் காசா நகரில் இஸ்ரேல் ராணுவம் தாக்குதலை தீவிரப்படுத்தி உள்ளது. நேற்று ஒரே நாளில் இந்த தீவிர தாக்குதலில் 78 பேர் பலியாகினர். பல கட்டிடங்கள் குண்டுவீச்சில் சேதப்படுத்தப்பட்ட நிலையில் அவற்றில் சிக்கியிருக்கும் தங்கள் உறவினர்களை மீட்க முடியாமல் பலரும் கதறுகின்றனர். தொடர்ந்து குண்டுவீச்சு தாக்குதல்கள் நடப்பதால் பாதிக்கப்பட்ட இடங்களில் மீட்பு பணி மேற்கொள்வது கடினமாக இருப்பதாக கூறி உள்ளனர். இதற்கிடையே, அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ இஸ்ரேல் பயணம் மேற்கொண்டு அங்கிருந்து கத்தாருக்கு சென்றுள்ளார்.

இஸ்ரேலில் இருந்து புறப்பட்ட போது பேட்டி அளித்த ரூபியோ, “காசா மீதான தாக்குதலை இஸ்ரேல் தொடங்கி விட்டது. போர் நிறுத்த ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு மிக குறைந்த அவகாசமே உள்ளது” என்றார். இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் கட்ஸ் அளித்த பேட்டியில், “காசா நகரம் தீப்பற்றி எரிகிறது. ஹமாஸ் ஆயுதங்களை கீழே போட்டு, பணயக் கைதிகளை விடுவிக்காவிட்டால் ஒட்டுமொத்த காசாவும் அழிக்கப்படும்” என கூறி உள்ளார். (ஐ)

## போதைப்பொருள் ஒழிப்பு ஒத்துழைக்காத நாடுகள் பட்டியலில் கொலம்பியா: அமெரிக்கா அரசு நடவடிக்கை

கடந்த 30 ஆண்டுகளில் முதல் முறையாக, போதைப்பொருள் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்காத நாடுகள் பட்டியலில் நட்பு நாடான கொலம்பியாவை அமெரிக்க அதிபர் டிரம்ப் சேர்த்துள்ளார். போதைப்பொருள் எதிர்ப்பு நடவடிக்கைகள் தொடர்பாக அமெரிக்காவுடன் ஒப்பந்தம் செய்து நிதி உதவிகளை பெற்று வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் மேற்கொள்ளப்பட்ட போதைப் பொருள் எதிர்ப்பு நடவடிக்கைகளின் அடிப்படையில் இந்த நாடுகளை அமெரிக்க அரசு பட்டியலிடும்.

இந்த ஆண்டு, அமெரிக்காவின் மிகவும் நெருங்கிய நட்பு நாடான கொலம்பியா சர்வதேச போதைப் பொருள் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு இணங்காத நாடுகள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. கடைசியாக கடந்த 1997ம் ஆண்டு இப்பட்டியலில் கொலம்பியா சேர்க்கப்பட்டது. அப்போதைய அதிபர் எர்னஸ்டோ சாம்பர் போதைப்பொருள் கடத்தல்காரர்களிடம் பணம் பெறுவதாக குற்றச்சாட்டுகள் பரவலாக இருந்தன. தற்போதைய அதிபர் குஸ்டாவோ பெட்ரோவின் ஆட்சியில் கோகோ பயிர்களை கைமுறையாக ஒழிப்பது 5,048 ஹெக்டேராக கணிசமான அளவு குறைந்துள்ளது.

இது அரசின் இலக்கான 30,000 ஹெக்டேரை விட மிக குறைவு. தென் அமெரிக்க நாடான கொலம்பியா, கொகைன் போதைப் பொருள் தயாரிப்பின் முக்கிய மூலப்பொருளான கோகோ சாகுபடியில் உலகின் முதன்மையான நாடாக திகழ்கிறது. போதைப் பொருள் எதிர்ப்பு நடவடிக்கைக்கு இணங்காத நாடாக அறிவிக்கப்பட்டதால் கிராமப்புறங்களில் பாதுகாப்பை மீட்பதற்கான பல்வேறு நிதி உதவிகளை அமெரிக்கா நிறுத்தும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## போதைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

22 முதல் 60 வயதுக்கு உட்பட்ட பெண்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த 2024 ஆம் ஆண்டு போதைப்பொருட்கள் வைத்திருந்த சம்பவம் தொடர்பில் 2 இலட்சத்து 28 ஆயிரம் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸாரின் தரவுகள் குறிப்பிட்டுள்ளன. இது, 2023 ஆண்டு காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது 41 சதவீத அதிகரிப்பாகும்.

2024இல் 832.3 கிலோ ஹெரோயின், 8 ஆயிரத்து 359 கிலோ கஞ்சா மற்றும் 1,364 கிலோ ஐஸ் போதைப்பொருள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 3 மாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கண்டி நோக்கிப் பயணித்த ஓட்டோ ஒன்று பாதசாரி கடவையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் மற்றும் மோட்டார் சைக்கிள் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது ஓட்டோவில் பயணித்த பெண் குழந்தை ஒன்றும் சிறுவன் ஒருவரும் காயமடைந்த நிலையில் கொழும்பு ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் பெண் குழந்தை உயிரிழந்துள்ளது.

களனி பிரதேசத்தைச் சேர்ந்த 3 மாத பெண் குழந்தையே உயிரிழந்துள்ளது.

இந்த விபத்து தொடர்பில் பேலியகொடை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சீனா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆகிய நாடுகள் விடுத்த கோரிக்கையைப் பிரிட்டன் நிராகரித்துள்ளது.

அதுமாத்திரமன்றி அங்கு கருத்துரைத்த இலங்கைப் பிரதிநிதி, நாட்டில் இனப்பிரச்சினை நடைபெறவில்லை எனவும், மாறாக பயங்கரவாத மோதலே நடைபெற்றது எனவும் தெரிவித்துள்ளதுடன் அதனைத் தீர்ப்பதற்குச் சிறப்புப் பொறிமுறைகள் எவையும் தேவையில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடர் கடந்த 8 ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமானது. தொடக்க நாள் அமர்வில் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க்கினால் இலங்கை குறித்த எழுத்து மூல அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து அந்த அறிக்கை மீதான விவாதம் இடம்பெற்றது.

அதேவேளை இலங்கை தொடர்பில் பேரவையில் ஏற்கனவே கால நீடிப்பு செய்யப்பட்டு நடைமுறையில் இருந்த 57ஃ1 தீர்மானம் முடிவுக்கு வந்திருக்கும் நிலையில், இம்முறை கூட்டத் தொடரில் இணை அனுசரணை நாடுகளால் இலங்கை தொடர்பில் புதிய பிரேரணை சமர்ப்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன்படி பிரிட்டன் தலைமையில் கனடா, மாலாவி, மொன்டெனீக்ரோ மற்றும் வட மெசிடோனியா உள்ளிட்ட இணை அனுசரணை நாடுகளால் 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்' எனும் தலைப்பில் தயாரிக்கப்பட்டுள்ள இலங்கை தொடர்பான புதிய பிரேரணையின் திருத்தங்கள் உள்வாங்கப்படாத 60ஃஎல்.1 எனும் முதலாவது வரைவு வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் அந்தப் பிரேரணை தொடர்பான உத்தியோகப்பற்றற்ற கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இலங்கை நேரப்படி பி.ப. 1 மணிக்கு ஜெனிவாவில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் பிரிட்டன், வட அயர்லாந்து, கனடா, மாலாவி, மொன்டெனீக்ரோ மற்றும் வட மெசிடோனியா ஆகிய நாடுகளின் ஜெனிவாவுக்கான நிரந்தர வதிவிடப்பிரதிநிதிகளும், பேரவையில் அங்கம் வகிக்கும் இலங்கைக்கு ஆதரவான மற்றும் எதிரான சில நாடுகளின் பிரதிநிதிகளும், ஜெனிவாவுக்கான இலங்கையின் பிரதி வதிவிடப்பிரதிநிதி உள்ளிட்ட அதிகாரிகளும், அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் புலம்பெயர் தமிழர் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது இலங்கை அரசின் சார்பில் கருத்து வெளியிட்ட வதிவிட அலுவலகப் பிரதிநிதி, இலங்கையில் இனப்பிரச்சினை நடைபெறவில்லை எனவும், மாறாக பயங்கரவாத மோதலே நடைபெற்றது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு சிறப்புப் பொறிமுறையொன்று அவசியமில்லை என்றும், நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள குற்றவியல் நீதிக்கட்டமைப்பின் ஊடாகவே இதற்குத் தீர்வு காண முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதுமாத்திரமன்றி பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பதிலீடு செய்தல், நிகழ்நிலைக்காப்புச் சட்டத்தைத் திருத்தியமைத்தல் என்பன உள்ளடங்கலாக அரசால் முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் தொடர்பிலும் அவர் விளக்கமளித்துள்ளார்.

அதேவேளை இலங்கையில் இடம்பெற்ற கடந்தகால மீறல்கள் தொடர்பில் ஆதாரங்களைத் திரட்டும் வகையில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தை இரண்டு வருடங்களுக்குப் பிற்போடுமாறு சீனா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் இதன்போது வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்தக் கோரிக்கை இலங்கை அரசால் இணை அனுசரணை நாடுகளிடம் ஏற்கனவே முன்வைக்கப்பட்டதாகவும், அதற்குப் பதிலாகப் புதிய பிரேரணையை நிறைவேற்றுவதற்கு வாக்கெடுப்பைக் கோராதிருப்பதாகப் பேரம் பேசியதாகவும், இருப்பினும் அதனைப் பிரிட்டன் மறுத்துவிட்டதாகவும் அறியக் கிடைத்தது. அதேபோன்று நேற்றுமுன்தினம் சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையையும் பிரிட்டன் மறுத்துவிட்டதாக நம்பத் தகுந்த வட்டாரங்கள் மூலம் அறியமுடிகின்றது.

இது இவ்வாறிருக்க இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்றவாறு தற்போது சமர்ப்பித்திருக்கும் புதிய பிரேரணையை நிறைவேற்றுவதில் தாம் கொண்டிருக்கும் உறுதியான நிலைப்பாட்டினை வெளிப்படுத்திய பிரிட்டன் உள்ளிட்ட இணை அனுசரணை நாடுகளின் பிரதிநிதிகள், இலங்கை வாக்கெடுப்பைக் கோரினாலும், புதிய தீர்மானத்தை நிறைவேற்றுவதற்குப் போதுமான வாக்குகள் தம்வசம் இருப்பதாக நம்பிக்கை வெளியிட்டுள்ளன.

மேலும், இந்தக் கலந்துரையாடலில் கருத்து வெளியிட்ட அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் புலம்பெயர் தமிழர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், இலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீன சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தியுள்ளனர்.

## மஹிந்தவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சந்தித்த பின்னர், விமல் வீரவன்ச தனது பேஸ்புக் கணக்கில் பின்வருமாறு பதிவிட்டுள்ளார்.

"பல தசாப்தங்களாக வளர்க்கப்பட்ட விடுதலைப்புலி பயங்கரவாதத்தை தோற்கடிப்பதில் அரசியல் தலைமைத்துவத்தை வழங்கிய 5 ஆவது நிறைவேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தனது உயிருக்கு அச்சுறுத்தல்கள் இருந்த போதிலும், கொழும்பில் உள்ள தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து திரும்பி தங்காலை - கார்ல்டன் இல்லத்தில் குடிபெயர்ந்தார் என்ற செய்தி, இலங்கையில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் பெரும் கவனத்தை ஈர்த்த செய்தியாகும்.

அரசியல் வேறுபாடுகள் இருந்த போதிலும், பயங்கரவாதத்தைத் தோற்கடிக்க அவர் வழங்கிய அரசியல் தலைமைக்கு நன்றி தெரிவிக்கும் ஒரு செயலாகும்.

தேசிய சுதந்திர முன்னணியின் தேசிய அமைப்பாளர் ஜயந்த சமரவீர மற்றும் தேசிய சுதந்திர முன்னணியின் பிற பிரதிநிதிகள் தங்காலை - கார்ல்டன் இல்லத்தில் அவரைச் சந்தித்து அவரது நலம் குறித்து விசாரித்து எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொண்டோம்." - என்றுள்ளது.

## இடிந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திருட்டுப் போயிருந்த நிலையிலையே இன்று மந்திரிமனையின் ஒரு பாகம் இடிந்து விழுந்துள்ளது.

யாழ்ப்பாணம் இராசதானி காலத்துக்குரியதாகக் கருதப்படும் மந்திரிமனை, பாதுகாக்கப்பட வேண்டிய தொல்பொருள் சின்னமாக 2011 ஆம் ஆண்டு வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 223 கோடி ரூபா செலவில் யாழ். பல்கலைக்குக் கட்டடம்

கொழும்பு, செப். 17

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கு 223 கோடியே 40 இலட்சம் ரூபா செலவில் 5 மாடிக் கட்டடம் அமைக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகத்தின் துணை சுகாதார விஞ்ஞான பீடத்துக்கு விரிவுரை மண்டபங்கள், ஆய்வகங்கள், கேட்போர் கூடம் உள்ளிட்ட நவீன வசதிகளுடன் இந்தக் கட்டடம் அமையவுள்ளது.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழில்கல்வி அமைச்சர் சமர்ப்பித்த இந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

2006ஆம் ஆண்டு அரச பல்கலைக்கழகங்களில் துணை சுகாதார விஞ்ஞானம் தொடர்பான பட்டப்படிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதன்படி, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானம், மருந்து வேதியியல், தாதியியல் துறைகளில் மூன்று பட்டப்படிப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. தற்போது, இங்கு மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானம், மருந்து வேதியியல், தாதியியல் மற்றும் உடற்கல்வி ஆகிய நான்கு பாடத் துறைகளில் அனைத்து இனங்களையும் சேர்ந்த 952 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர் என்று அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ கூறினார்.

"2017ஆம் ஆண்டு துணை சுகாதார விஞ்ஞான பீடத்திற்கான கட்டடத்தை நிர்மாணிக்க அமைச்சரவை ஒப்புதல் வழங்கியிருந்தாலும் நிதி நெருக்கடி காரணமாக அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இதனால், பீடத்தில் உட்கட்டமைப்பு வசதி பற்றாக்குறை நிலவி வருகின்றது. இதனை நிவர்த்தி செய்யும் விதமாகவே புதிய கட்டடம் அமையவுள்ளது." - என்று அமைச்சரவைப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

# மரம் ஒரு வரம்.........

நம் வீட்டை சுற்றி உள்ள இடங்களில் மரங்கள் வைக்கவும் , அதே போல மற்றவர்களையும் மரம் வளர்க்க கூறி வலியுறுத்தியும் வருவோம்.

தற்போது மரம் நடுவது என்பது அரசியல்வாதிகள் பொதுநலவாதிகள் ஆன்மீகவாதிகள் என்ற எந்த பாகுபாடும் இல்லாமல் அனைவரும் செய்யும் காரியம் என்றாகி விட்டது.

முதலில் மரம் நடுகிறார்கள் ஐம்பதாயிரம், ஒரு லட்சம் மரக்கன்றுகள் நடுகிறார்கள் பின்னர் அவர்களது வேலை மரம் வைப்பதோடு முடிந்தது பராமரிப்பது கிடையாது. இதில் தனியார், அரசு, ஆன்மிகம் என்று எவரும் பாகுபாடு இல்லை. இவ்வாறு ஆயிரக்கணக்கில் செடிகளை வைத்து அவற்றை கருக செய்வதற்கு இவர்கள் எதற்கு நடனும்.

இதில் ஒரு சிறு ஆறுதல் அப்படியும் தப்பி தவறி ஒரு சில செடிகள் தப்பி பிழைத்து விடுகின்றன.பொதுவாக அரசாங்கம் செடிகளை வைத்தாலும், அதை ஒரு சில இடங்களிலேயே சரியாக பராமரிக்கிறார்கள், பெரும்பான்மையான இடங்களில் அங்கே செடி வைத்ததற்கான அடையாளமே இருக்காது (அந்த கூண்டு மட்டும் காணலாம்).

சரி நமது அரசாங்கங்கள் தான் அப்படி செய்ய பழகி விட்டது, இதில் கவலை பட என்ன இருக்கிறது! என்று நம்மை சமாதான படுத்திக்கொண்டாலும், மற்றவர்களும் இதை போல தான் நடந்து கொள்கிறார்கள் என்பதை தவிர்க்கவேண்டும்.

வருடாவருடம் பலர் மரம் நடுவதாக அறிவிப்பு செய்து விளம்பரப்படுத்தி பெரிய அளவில் செய்வார்கள். அதே போல் செடி நட்டாலும் பாதுகாப்பு இன்றி செடி பட்டுபோய் விடுகிறது. அதற்க்கு பாதுகாப்பாக வைத்த குச்சிகள் தளைத்து!! பின் தண்ணீர் விடாததால் பின் அதுவும் வறண்டு போய் விடுகிறது.. இதை போல மரம் நடுகிறேன் செடி வளர்க்கிறேன் என்று விளம்பரத்திற்காக வெட்டி வேலை செய்வதை தவிர்த்து,வைத்த செடியை பேணி பாதுகாத்து வளர்க்க வேண்டுகிறோம் .

மரம் நடுவது என்பது மிகச்சிறந்த செயல் அதில் எந்த சந்தேகமுமில்லை, தற்போது பூமியில் வெப்பத்தின் அளவு அதிகரித்து வரும் வேளையில் இயற்கையின் அருமையை இன்னும் உணராமல் இருப்பது தான் தவறு.

ஆனால் இதை போல விளம்பரத்திற்காக லட்சம் செடிகளை நடுகிறேன் என்று உருப்படியாக 100 செடி கூட நல்ல முறையில் வளர்க்காமல் இருப்பதற்கு எதற்கு அத்தனை செடிகள் நடவேண்டும்? செடியை நட்டால் மட்டும் போதுமா? அதை பராமரிக்க வேண்டாமா! எத்தனை செடிகளை நடுகிறோம் என்பது முக்கியமல்ல அதில் எத்தனை செடியை நன்றாக வளர்த்தோம் என்பதே கேள்வி! . ஆசை இருந்தால் மட்டும் போதுமா! அதை அடைவதற்க்குண்டான சரியான முயற்சியில் இறங்க வேண்டாமா! இவர்களை போன்ற அமைப்புகள் 100 செடிகளை நட்டாலும் அதை சரியான முறையில் பாதுகாத்து வளர்த்தாலே மிகப்பெரிய சமுதாய தொண்டு.

இது வரை இதை போல லட்ச கணக்கில் நட்டதற்கு இந்நேரம் தமிழகம் அமேசான் காடு மாதிரி ஆகி இருக்க வேண்டும்!! இதில் அதிக அளவில் மரம் நட்டு கின்னஸ் சாதனைக்கு கூட முயற்சித்தார்கள் என்று நினைக்கிறேன், இதை போல விளம்பரங்களே இவர்களுக்கு முக்கிய நோக்கமாக உள்ளது மரம் வளர்ப்பதில் இல்லை. இவர்கள் செய்யும் இந்த செயலில் ஒரு சில செடிகள் எப்படியாவது தம் கட்டி உயிர் பிழைத்து விடுவது மனதிற்கு ஆறுதலும் சந்தோஷமும் அளிக்கும் செய்தி.

இயற்கையின் மகத்துவத்தை உணராதவரை நமது பகுதி முன்னேற வாய்ப்பில்லை. இதன் அருமை உணராமல் எப்படிதான் வறட்டு மனம் கொண்டவர்களாக சி(ப)லர் இருக்கிறார்களோ! மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!!








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.09.2025 வெளியிடப்பெற்றது.